**உணவுப் பணவீக்கம் 9% ஆக சரிவு**

First Published : 25 Nov 2011 12:53:07 AM IST

புது தில்லி, நவ.24 : நாட்டின் உணவுப் பணவீக்கம் நவம்பர் 12-ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் 9.01 சதவீதமாக சரிந்துள்ளது. இதற்கு முந்தைய வாரம் இது 10.63 சதவீதமாக இருந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இது 11.38 சதவீமாக இருந்தது.

ஆண்டுக்கணக்கில் கணக்கிடும் போது, வெங்காயத்தின் விலை 32.85 சதவீதம் குறைந்துள்ளது. உருளைக் கிழங்கின் விலை 7.23 சதவீதமும், கோதுமையின் விலை 3.09 சதவீதமும் குறைந்துள்ளன. இந்த மூன்றையும் தவிர மற்ற உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன.

காய்கறிகளின் விலை 17.66 சதவீதமும்,பயறுகளின் விலை 14.28 சதவீதமும், பாலின் விலை 10.46 சதவீதமும், முட்டை, மாமிசம், மீன்களின் விலைகள் 11.98 சதவீதமும் உயர்ந்துள்ளன. பழங்களின் விலை 4.59 சதவீதமும்,சிறுபயறுகளின் விலை 2.86 சதவீதமும் அதிகரித்துள்ளது. முதன்மைப் பொருள்களின் விலை 9.08 சதவீதம் உயர்ந்துள்ளது. இதற்கு முந்தைய வாரம் இது 10.39 சதவீதமாக காணப்பட்டது. இழைகள், எண்ணெய் வித்துகள், கனிமங்கள் போன்ற உணவு சாராப் பொருள்களின் விலைகள் 4.05 சதவீதம் அதிகரித்துள்ளன.

பிரணாப் கருத்து : ""பொதுவாக வாரந்தோறும் வெளியிடப்படும் புள்ளிவிவரங்களில் எனக்கு நம்பிக்கை கிடையாது. ஆனால், உணவுப் பணவீக்க விகிதம் தொடர்ந்து சரிந்து வந்தால், அது நல்லது எனக் கருதலாம். அடுத்த இரு வாரங்களிலும் இந்நிலை தொடர்ந்தால், அது ஆண்டு முடிவில் கணக்கிடப்படும் பணவீக்கப் புள்ளிவிவரங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்'' என்றார் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

**செறிவூட்டப்பட்ட கம்போஸ்ட் தொழு உரம் தயாரிப்பது எப்படி?**

பா.சுஜித்குமார்

First Published : 24 Nov 2011 10:34:47 AM IST

திருவண்ணாமலை: செறிவூட்டப்பட்ட கம்போஸ்ட் தொழு உரத்தைத் தயாரித்து பயன்படுத்துவதன் மூலம் மண் வளத்தை அதிகப்படுத்துவதுடன், இடுபொருள் செலவையும் குறைக்கலாம்.

விவசாய உற்பத்தியில் முக்கிய பங்கு வகிப்பது உரம் ஆகும். நாளுக்கு நாள் உரத்தின் தேவை அதிகரித்து வருகிறது. மேலும் கனிம உரங்களின் பயன்பாடு போதிய அளவில் இருந்த போதும் பயிர்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லை. இதற்கு முக்கிய காரணம் இயற்கை உரங்களை நிலத்தில் இடாததும், உரங்களின் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்காததுமே ஆகும்.

இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் (இப்கோ) விவசாயிகள் மத்தியில் இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

தொழு உரம் தயாரிப்பு முறைகள்

தேவையான பொருள்கள்:

பண்ணைக்கழிவு-250 கிலோ, மாட்டுச்சாணம்-250 கிலோ, டிஏபி உரம்-25 கிலோ அல்லது இப்கோ 20:20 உரம் 40 கிலோ, ராக் பாஸ்பேட் 140 கிலோ, ஜிப்சம் 100 கிலோ, யூரியா 5.5 கிலோ, உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் 1 கிலோ, பாஸ்போபேக்டிரீயா 1 கிலோ.

தயாரிப்பு முறை: கம்போஸ்ட் தயாரிக்க 10 அடி நீளமும் 5 அடி அகலமும் 3 அடி ஆழமும் உள்ள குழியை, சூரிய வெளிச்சம் படும் மேடான இடத்தில் தேர்வு செய்ய வேண்டும்.

சோகைத்தாள் மற்றும் பண்ணைக்கழிவுகள் 250 கிலோ மற்றும் சாணம் 250 கிலோ சேகரிக்கவேண்டும். அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபேக்டீரியம் ஆகியவற்றை பசும் சாணக்கரைசலுடன் கலக்க வேண்டும்.

குழியில் ஒரு வரிசை பண்ணைக்கழிவுகள் இட்டு அதன்மேல் டிஏபி, யூரியா மற்றும் ஜிப்சம் ஆகியவற்றை பரப்பி அதற்கு மேல் பசும் சாணக்கரைசலை ஊற்றி மூடுமளவு மண்ணைப் பரப்ப வேண்டும்.

இதுபோன்று 16 வரிசைகள் இட்டு 3 அடி ஆழ குழியை நிரப்பி மேலாக கெட்டியான சாணக்கரைசல் கொண்டு மூடவேண்டும்.

மழை மற்றும் காற்றில் இருந்து பாதுகாக்க குழியை பாலித்தீன் தாள் கொண்டு மூட வேண்டும். ஈரத்தன்மையை நீட்டிப்பதற்கு இரண்டு முதல் நான்கு இடங்களில் குழாய் வழியாக தண்ணீர் ஊற்றி ஊறச்செய்யவேண்டும்.

110 நாள்கள் கழிந்து மக்கியுள்ள இந்த உரத்தை எடுத்து வயலுக்கு இடலாம். செறிவூட்டப்பட்ட இந்த தொழு உரத்தில் 1.5 முதல் 2.5 சதவீதம் தழைச்சத்து, 3.4 முதல் 4.2 சதவீதம் மணிச்சத்து மற்றும் சுண்ணாம்பு, கந்தகச் சத்துகள் அடங்கி இருக்கும்.

தொழு உரத்தின் பயன்கள்:

தழை, மணி, கந்தகம் மற்றும் சுண்ணாம்பு சத்துகளை கூடுதலாகத் தருகிறது.

மண் உள்ள மணிச்சத்தை பயிருக்கு கிடைக்க வழிவகை செய்கிறது. மண் வளத்தை அதிகப்படுத்தி அங்கக சத்தைக் கூட்டுகிறது. கனிம வளங்களின் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கிறது. மண்ணின் ஈரத்தன்மையைக் காக்கிறது. மானாவாரி நிலங்களுக்கு மிகவும் ஏற்றது.

**துவரை சாகுபடியில் மகசூலை அதிகரிக்க...**

First Published : 24 Nov 2011 10:34:22 AM IST

வேலூர்: துவரை சாகுபடியில் மகசூலை அதிகரிக்க டிஏபி கரைசலை பயிரின் மீது தெளிக்கலாம் என நாட்டறம்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் த.கணேசன் யோசனை தெரிவித்துள்ளார்.

நாட்டறம்பள்ளி வட்டாரத்தில் 1,600 ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மூலம் விதை மற்றும் இடுபொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்போது நாட்டறம்பள்ளி வட்டாரத்தில் துவரை பயிர் பூக்கும் தருவாயில் உள்ளது. தரமான மற்றும் அதிக மகசூல் பெறுவதற்கு கீழ்க்கண்ட தொழில்நுட்பத்தை விவசாயிகள் கையாளலாம்.

12.5 கிலோ டிஏபி உரத்தை 25 லிட்டர் தண்ணீரில் ஊரவைக்க வேண்டும். இக்கரைசலை தெளிப்பதற்கு முன் வடிகட்டி, 600 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிரின் மீது மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். மீண்டும் 15 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.


இவ்வாறு இருமுறை தெளிப்பதால் நல்ல திரட்சியான, தரமான விதைகள் கிடைப்பதோடு, ஹெக்டேருக்கு 1,000 முதல் 1,500 கிலோ வரை மகசூல் கிடைக்கும் என்று த.கணேசன் தெரிவித்துள்ளார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**உணவுப் பொருள் பணவீக்கம் 9.01 சதவீதமாக சரிவு**

நவம்பர் 25,2011,00:46




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், நவம்பர் 12ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 9.01 சதவீதமாக குறைந்துள்ளது. இது, 5ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 10.63 சதவீதமாக மிகவும் அதிகரித்து காணப்பட்டது. ஆக, கணக்கீட்டு வாரத்தில், உணவுப் பொருள் பணவீக்கம் 1.62 சதவீதம் சரிவடைந்து, மீண்டும் ஒற்றை இலக்கத்திற்கு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், வெங்காயத்தின் விலை, 32.85 சதவீதம் குறைந்துள்ளது. இது தவிர, உருளைக்கிழங்கு (7.23 சதவீதம்) கோதுமை விலை (3.09 சதவீதம்) குறைந்துள்ளது. அதேசமயம், பெரும்பாலானஉணவுப் பொருட்களின் விலை அதிகரித்தே காணப்பட்டது. குறிப்பாக, காய்கறிகள் விலை 17.66 சதவீத அளவிற்கு அதிகரித்துள்ளது. பருப்பு வகைகள் (14.28 சதவீதம்), பால் விலை (10.46 சதவீதம்), முட்டை, இறைச்சி மற்றும் மீன் (11.98 சதவீதம்)ஆகியவற்றின் விலையும் அதிகரித்திருந்தது.

இது தவிர, பழங்கள் விலை 4.59 சதவீதமும், உணவு தானியங்கள் விலை 2.86 சதவீதமும் உயர்ந்திருந்தது.முக்கிய பொருட்களுக்கான பணவீக்கம் 9.08 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இது, இதற்கு முந்தை வாரத்தில், 10.39 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்துகாணப்பட்டது.

மொத்த விலைக் குறியீட்டு எண்ணை கணக்கீடு செய்வதில், முக்கிய பொருட்களின்பங்களிப்பு 20 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.உணவு சாராத பொருட்களின் கீழ், நூலிழை, எண்ணெய்வித்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களின் விலை 4.05 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 5.33 சதவீதமாக உயர்ந்து காணப்பட்டது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான பணவீக்கம், மாற்றம் ஏதுமின்றி 15.49 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது.தற்போதைய நிலையில், உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் குறைந்துள்ளது என்பது, மத்திய அரசுக்கும், ரிசர்வ் வங்கிக்கும் சற்று ஆறுதல் அளிப்பதாக உள்ளது. எனினும், பொருட்களின் சப்ளையில் உள்ள குறைபாடுகளை நீக்க, மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

இதனையடுத்து, வரும் டிசம்பர் மாதம் முதல் பொருட்களின் விலை படிப் படியாக குறைய தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.பணவீக்கம் குறித்து அண்மையில் கருத்து தெரிவித்த நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, "விலைவாசி உயர்வை கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது.

இது, நீண்ட கால அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சிக்கு பலன் தருவதாக அமையும். மேலும், வரும் 2012ம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள், நாட்டின் பொதுப் பணவீக்கம் 6-7 சதவீத அளவிற்கு குறையும்' என்று தெரிவித்தார்.நாட்டின் பொதுப் பணவீக்கம், 2010ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல், 9 சதவீதத்திற்கும் அதிகமாகவே உள்ளது.

இது, கடந்த அக்டோபர் மாதத்தில், 9.73 சதவீதம் என்ற அளவில் இருந்தது.பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையாக, ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை, 2010ம் ஆண்டு மார்ச் முதல், இது வரையிலுமாக, 13 முறை அதிகரித்துள்ளது.

மேலும், வரும் டிசம்பர் மாதத்திற்குள், தேவை மற்றும் அளிப்பிற்கும் உள்ள இடைவெளி குறைந்து, வரும் மார்ச் மாதத்திற்குள் நாட்டின் பணவீக்கம் 7 சதவீதமாக யசரிவடையும் என, ரிசர்வ் வங்கி அதன்இரண்டாவது காலாண்டு நிதிக் கொள்கையில் தெரிவித்துள்ளது.

வெளி நாடுகளில் ரப்பர் தோட்டம் வாங்குவதில் தீவிரம்

நவம்பர் 25,2011,00:40



இந்திய டயர் தயாரிப்பு நிறுவனங்கள், முக்கிய மூலப்பொருளான இயற்கை ரப்பரை தடையில்லாமல், பெறுவதற்காக வெளிநாடுகளில் ரப்பர் தோட்டங்களை வாங்கும் நடவடிக்கையில் தீவிரமாக களம் இறங்கியுள்ளன.உள்நாட்டில், கடந்த ஒரு சில ஆண்டுகளாக, இயற்கை ரப்பர் உற்பத்தி, தேவையை விட குறைவாக உள்ளது. மேலும், இதன் விலை உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. சர்வதேச விலையுடன் ஒப்பிடும் போது, உள்நாட்டில் இயற்கை ரப்பர் விலை அதிகமாக உள்ளது.

இது போன்ற காரணங்களால், டயர் தயாரிப்பு நிறுவனங்கள், அதிகளவில் இயற்கை ரப்பர் உற்பத்தியாகும், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம் மற்றும் லாவோஸ் போன்ற நாடுகளில் ரப்பர் தோட்டங்களை கையகப்படுத்த தொடங்கியுள்ளன.அப்பல்லோ டயர்ஸ் நிறுவனம், லாவோஸ் நாட்டில் ரப்பர் தோட்டத்தை வாங்கியுள்ளது. இதே போன்று எம்.ஆர்.எப். மற்றும் ஜே.கே.டயர்ஸ், சியட் டயர்ஸ் ஆகிய நிறுவனங்களும், வெளிநாடுகளில் ரப்பர் தோட்டங்கள் வாங்க முனைப்பு காட்டி வருகின்றன.

அப்பல்லோ டயர்ஸ் நிறுவனம், தற்போது மாதம் ஒன்றுக்கு சராசரியாக, 16 ஆயிரம் டன் இயற்கை ரப்பரை பயன்படுத்திக் கொள்கிறது. இந்நிறுவனம், அதற்கு தேவையான மொத்த இயற்கை ரப்பரில், 25 சதவீத ரப்பரை பெறும் வகையில், லாவோஸ் நாட்டில் 10 ஆயிரம் எக்டேரில் அமைந்துள்ள ரப்பர் தோட்டத்தை ஏற்கனவே வாங்கியுள்ளது. டயர் தயாரிப்பில் இயற்கை ரப்பரின் பங்களிப்பு 50 சதவீதமாகும். தற்போது இந்தியாவில், ஆண்டுக்கு 2 லட்சம் டன் என்ற அளவிற்கு, இயற்கை ரப்பருக்கு பற்றாக்குறை உள்ளது. இந்த பற்றாக்குறை இறக்குமதி வாயிலாகவே ஈடு செய்யப்படுகிறது.

**நாட்டின் உணவு பணவீக்கம் 9.01% ஆக குறைவு**

நவம்பர் 24,2011,11:49



புதுடில்லி : கடந்த வாரத்திற்கான நாட்டின் உணவு பணவீக்கம் 9.01 சதவீதமாக குறைந்துள்ளது. நவம்பர் 12ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் நாட்டின் உணவு பணவீக்கம் ஒற்றை இலக்க எண்ணை அடைந்துள்ளது. கடந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 10.63 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. வேளாண் பொருட்கள், உருளைக்கிழங்கு, வெங்காயம், கோதுமை போன்ற பொருட்களின் விலை தொடர்ந்து குறைந்து வருவதால் உணவு பணவீக்கம் குறைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வெங்காயத்தின் விலை 32.85 சதவீதமும், உருளைக்கிழங்கு 7.23 சதவீதமும், கோதுமை 3.09 சதவீதமும் குறைந்துள்ளது. அதேசமயம் காய்கறிகளின் விலை 17.66 சதவீதமும், பருப்பு வகைகளின் விலை 14.28 சதவீதமும், பால் விலை 10.46 சதவீதமும், முட்டை, இறைச்சி மற்றும் மீன் விலை 11.98 சதவீதமும் அதிகரித்துள்ளது. ஆண்டு அடிப்படையில் பழங்களின் விலை 4.59 சதவீதமும், தானிய வகைகளின் விலை 2.86 சதவீதமும் அதிகரித்துள்ளது.

**கி.கிரி மாவட்டத்தை பசுமையாக்க 50,000 மரக்கன்று நடவு: கலெக்டர்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2011,00:30 IST

கருத்தை பதிவு செய்ய

கிருஷ்ணகிரி: ""கிருஷ்ணகிரி மாவட்டத்தை பசுமை மாவட்டமாக மாற்றும் திட்டத்தின் கீழ், 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது,'' என, கலெக்டர் மகேஸ்வரன் தெரிவித்தார். கிருஷ்ணகிரி மாவட்டத்தை பசுமை மாவட்டமாக மாற்றும் திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி ராயக்கோட்டை மேம்பாலம் அருகே மரக்கன்றுகளை, கலெக்டர் மகேஸ்வரன் நட்டு வைத்து, நிருபர்களிடம் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தை பசுமை மாவட்டமாகவும்,

கார்பன் இல்லாத மாவட்டமாக்க, மாவட்ட நிர்வாகம் சிறப்பு முயற்சி எடுத்து செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம், இரண்டு லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டு, அதில் முதல் கட்டமாக, ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் பணிகள் நடந்து வருகிறது.
அரசு ஆரம்ப பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், அரசு அலுவலக கட்டிடங்கள், கிருஷ்ணகிரி, ஓசூர் நகராட்சிகள், ஆறு டவுன் பஞ்சாயத்துகள் ஆகிய இடங்களில், தற்போது, 50 ஆயிரம் மரக்கன்றுள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள மரக்கன்றுகள் நடும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது.

கிருஷ்ணகிரி சுற்றுவட்டார பகுதியில் நடுவதற்கு, எல்.என்.டி., நிறுவனம், 25 ஆயிரம் மரக்கன்றுகளை நன்கொடையாக வழங்கியுள்ளது. இதில், 4,000 மரக்கன்றுகள், கிருஷ்ணகிரி நகராட்சி பகுதியில் நடவு செய்யப்படுகிறது. மாவட்டத்தில், எந்தெந்த பகுதியில், எந்த வகையான மரக்கன்றுகள் நடவு செய்தால், பொதுமக்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்பது குறித்து, வேளாண்மை துறை, வனத்துறை, தோட்டக்கலை துறை ஆகிய துறைகளை சேர்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைந்து, ஆலோசனை மேற்கொண்டு, மரக்கன்றுகளை தேர்வு செய்து நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மூன்று ஆண்டுகளுக்கு மரத்தை வளர்த்து பாதுகாக்க மரம் ஒன்றுக்கு, 250 ரூபாய் வீதம் தனியார் ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ள இந்த சிறப்பு முயற்சிக்கு, பொதுமக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள், வணிகர்கள் அனைவரும் சிறப்பான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு பேசினார்.

**வேளாண் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற கி.கிரி மாவட்ட விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2011,00:30 IST

கருத்தை பதிவு செய்ய
கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் சேர்ந்து பயன் அடைய, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில், நடப்பாண்டில் விவசாயிகளுக்கான செயல்முறை விளக்க பயிற்சி திட்டத்தின் கீழ் சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் மற்றும் நீர்

சேமிப்பு பாசன கருவிகள் மூலம் நீர் மேலாண்மை பயிற்சி மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகளை இயக்குதல், பராமரித்தல் பயிற்சி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நீர் வள, நிலவள திட்டத்தின் கீழ், மார்க்கண்டேய மற்றும் பெண்ணையாறு உபபடுகை பகுதிகளில் சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் மற்றும் நீர் சேமிப்பு கட்டமைப்பு பணிகளும், மழை நீர் சேகரிப்பு மற்றும் நீரியல் மேலாண்மை திட்டத்தின் கீழ் நீர்சேகரிப்பு கட்டமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பலவகை தானியங்கள் கதிரடிக்கும் கருவி, களை எடுக்கும் இயந்திரம், நான்கு கரம் களை எடுக்கும் இயந்திரம், மருந்து தெளிப்பான் கருவி, பவர் டில்லர், சுழல் கலப்பை, டிராக்டர் பவர் டில்லர் மூலம் இயங்கும் உபகரணங்கள், தோட்டக்கலை பயிர்களை பயிரிட பயன்படும் உபகரணங்கள் மற்றும் தேங்காய் மட்டை உரிப்பான் போன்ற வேளாண் கருவிகள் மானியத்தில் வழங்கப்படுகிறது.

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அதிவிரைவு பயறுவகை உற்பத்தி திட்டத்தின் கீழ், தளி வட்டாரத்தில் பழைய பண்ணைக்குட்டையை சீரமைத்தல் மற்றும் புதிய பண்ணைக் குட்டைகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள அரசாணை பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த திட்டங்களில் சேர்ந்து பயன்அடைய விரும்பும், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல்துறை, 43, செட்டியம்பட்டி ரோடு, அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி" என்ற முகவரியிலும், ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னசந்திரம், ஓசூர்' என்ற முகவரியிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

### 2,600 டன் பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உரம் வருகை

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2011,00:46 IST

தஞ்சாவூர்: ஜோர்டான் நாட்டிலிருந்து தூத்துக்குடிக்கு அனுப்பி வைக்கப்பட்ட 2,100 டன் பொட்டாஷ் மற்றும் 500 டன் காம்ப்ளக்ஸ் உரம் அங்கிருந்து ரயில் மூலம் தஞ்சாவூருக்கு வந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவையை தொடர்ந்து தற்போது ஒரு லட்சத்து 35 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சம்பா, தாளடி சாகுபடி பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பணிகள் நடந்து

வருகிறது. இதில், 46 ஆயிரத்து 200 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 42 ஆயிரத்து 770 ஹெக்டேரில் சாதாரண முறையிலும் நாற்று விடும் பணி முடிந்துள்ளது. 35 ஆயிரம் ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 35 ஆயிரம் ஹெக்டேரில் சாதாரண முறையிலும் என மொத்தம் 70 ஆயிரம் ஹெக்டேரில் நடவுப்பணிகள் நடந்து வருகிறது.

இந்த பயிர்களுக்கு தேவையான யூரியா, பொட்டாஷ் போன்ற உரங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டது. மேலும் கையிருப்பு உரங்களை கொண்டு விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது மேலும், தஞ்சை மாவட்டத்துக்கு தேவையான பொட்டாஷ் உரம் அதிகளவு இறக்குமதி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தஞ்சை மாவட்டத்துக்கு 2,600 டன் உரம் ஜோர்டான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, தூத்துக்குடியிலிருந்து சரக்கு ரயில் மூலம் நேற்று தஞ்சைக்கு கொண்டு வரப்பட்டது.

2,100 டன் பொட்டாஷ் உரமும், 500 டன் காம்ப்ளக்ஸ் உரமும் தஞ்சை வந்தது. இவை லாரிகள் மூலம் தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தனியார் உர விற்பனை நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. குறிப்பிட்ட விலைக்கு மேல் உரம் விற்பனை செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் இணை இயக்குனர் பாலசுப்பிரமணியன் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: வேளாண் உற்பத்திக்கு தேவையான தழை, மணி மற்றும் சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரங்களுக்கு வேளாண் துறை அதிகபட்ச சில்லறை விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டு அமலுக்கு வந்துள்ளது. 50 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை உரங்களின் விலை பட்டியல்: யூரியா (எம்.எஃப்.எல்., எம்.சி.எஃப்.,) ரூ.268.14, 20:20 (எம்.சி.எஃப்.,) ரூ.495, 20:20:13 (எம்.சி.எஃப்.,) ரூ.505.05, 16:20 (கொரமண்டல் இந்தியா லிட்) ரூ.537, எஸ்.எஸ்.பி., (கொரமண்டல் இந்தியா லிட்) ரூ.240, டி.ஏ.பி., (இப்கோ) ரூ.600, 20:20:13 (இப்கோ) ரூ.500, 10:26:26 (இப்கோ) ரூ.540, 20:20:0:13 (பாக்ட்) ரூ.646.60, அமோனியம் சல்பேட் (பாக்ட்) ரூ.464.75, யூரியா (ஆர்.சி.எஃப்.,) ரூ.268.23, யூரியாக (கிரிப்கோ) ரூ.265.50, டி.ஏ.பி., (எம்.சி.எஃப்.,) ரூ.631.31, யூரியா (இப்கோ) ரூ.265.50, டி.ஏ.பி., (எம்.சி.எஃப்.,) ரூ.631.31, டி.ஏ.பி., (ஜூவாரி) ரூ.798, யூரியாக (ஸ்பிக்) ரூ.268.14, டி.ஏ.பி., (ஸ்பிக்) ரூ.909, 20:20:0:13 (ஸ்பிக்) ரூ.545.43, எஸ்.எஸ்.பி., (ஸ்பிக்) ரூ.222.19, பொட்டாஷ் (ஐ.பி.எல்.,) ரூ.565.

அரசு நிர்ணயம் செய்த விற்பனை விலைக்கும் கூடுதலாக உரங்களை விற்பனை செய்பவர் மீது உரக்கட்டுப்பாட்டு ஆணையின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக சிறப்பு

கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, உரங்கள் விநியோகம் மற்றும் இருப்பு ஆகியவற்றை திடீர் ஆய்வு செய்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசு நிர்ணயித்த விலைக்கே உரம் வாங்கவும் மற்றும் அதற்கான விற்பனை பட்டியலை பெறவும் விவசாயிகளை கேட்டுக்கொள்கிறேன். கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்தால், அப்பகுதியில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குனர் அல்லது மாவட்ட வேளாண் இணை இயக்குனருக்கு டெலிஃபோன் மூலம் தகவல் தெரிவிக்கலாம். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் மொபைல்ஃபோன் எண்: 97509-69419, துணை இயக்குனர்கள் 97509-69415, 97509-69416, உதவி இயக்குனர் 97509-69419 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

தினகரன்

**உணவு பணவீக்கம் 9 சதவீதமாக சரிவு**

பதிவு செய்த நாள் : 11/25/2011 1:7:22



புதுடெல்லி : கடந்த 12ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்கு (9.01%) குறைந்துள்ளது. இது மேலும் குறையும் என மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார். உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் கோதுமை தவிர மற்ற உணவுப் பொரு ட்கள் விலை உயர்ந்த போதிலும், கடந்த 12ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.01 சதவீதமாக குறைந்தது. அதற்கு முந்தைய வாரத்தில் இது 10.63 சதவீதமாக இருந்தது. கடந்த 9 மாதங்களில் இல்லாத அளவுக்கு அக்டோ பர் 22 உடன் முடிந்த வாரத்தில் 12.21 ஆக உயர்ந் தது. அதன் பிறகு 3 வாரங்களாக சரிந்து வருகிறது.

வெங்காயம் 32.85 சதவீதமும், உருளைக்கிழங்கு 7.23 சதவீதமும், கோதுமை 3.09 சதவீதமும் குறைந்திருந்தது. எனினும், காய்கறிகள் (17.66%), பருப்பு வகைகள் (14.28%), பால் (10.46%), முட்டை, இறைச்சி, மீன் (11.98%), பழங்கள் (4.59%) ஆகியவற்றின் விலை உயர்ந்தன. கடந்த ஆண்டின் இதே காலத்தில் உணவு பணவீக்கம் 11.38 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து, பிரணாப் கூறுகையில், ÔÔஉணவு பணவீக்கம் 3 வாரங்களாக குறைந்து வருகிறது. இது தொடர்ந்து குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு மேலும் 2 வாரங்களுக்கு குறைந்தால், முதன்மை பணவீக்கம் குறைய வாய்ப்பு உள்ளதுÕÕ என்றார்.

---

***நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி 42% அதிகரிப்பு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் (ஏப்ரல் – ஆகஸ்டு), சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், மோட்டார் வாகனங்கள், பால், உணவு தானியங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி ரூ.40,281 கோடியாக உயர்ந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.28,317 கோடியாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இறக்குமதி 42.2 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த புள்ளி விவரங்களை மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ளது.*

*பருப்பு வகைகள்*

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், பருப்பு வகைகள் இறக்குமதி 2 சதவீதம் அதிகரித்து ரூ.3,280 கோடியிலிருந்து ரூ.3,342.95 கோடியாக உயர்ந்துள்ளது. அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியில் இதன் பங்களிப்பு 8.3 சதவீதமாக உள்ளது. நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தி அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, இனி இறக்குமதி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமையல் எண்ணெய்

சமையல் எண்ணெயை அதிக அளவில் இறக்குமதி செய்வதில் உலக அளவில் நம் நாடு முதலிடத்தில் உள்ளது. பயன்பாட்டிலும் முன்னிலை வகித்து வரும் நாடுகளில் ஒன்றாக நம் நாடு திகழ்கிறது. இந்தியா அதன் சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதத்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது.

முதல் ஐந்து மாதங்களில் சமையல் எண்ணெய் இறக்குமதி 66 சதவீதம் அதிகரித்து ரூ.10,998.28 கோடியிலிருந்து ரூ.18,243.88 கோடியாக உயர்ந்துள்ளது. கச்சா பாமாயில் இறக்குமதி உயர்ந்ததையடுத்து, ஒட்டுமொத்தத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி அதிகரித்துள்ளது என மத்திய வர்த்தக அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருள்களின் மொத்த இறக்குமதியில், சமையல் எண்ணெயின் பங்கு 45.3 சதவீதமாக உள்ளது. நாட்டில் உணவு பணவீக்கம் அதிகமாக உள்ளதால், சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளை இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், மோட்டார் வாகனங்கள் இறக்குமதி வியக்கத்தக்க வகையில் 103.50 சதவீதம் அதிகரித்து ரூ.789.67 கோடியிலிருந்து ரூ.1,606.50 கோடியாக உயர்ந்துள்ளது.

குடைகள், பூட்டுகள், பொம்மைகள், கண்ணாடி சாமான்கள் உள்ளிட்ட சிறு தொழில் நிறுவன தயாரிப்புகள் இறக்குமதி 48.6 சதவீதம் அதிகரித்து ரூ.839.84 கோடியாக உயர்ந்துள்ளது.

ஆல்கஹால் கலந்த பானங்கள் மற்றும் நறுமண பொருள்கள் இறக்குமதி முறையே 47.50 சதவீதம் மற்றும் 68.3 சதவீதம் உயர்ந்துள்ளது.

உணவு தானியங்கள்

அதேசமயம், உணவு தானியங்கள், பால் மற்றும் பால் பொருள்கள் இறக்குமதி முறையே 93.4 சதவீதம் மற்றும் 28.4 சதவீதம் குறைந்துள்ளது. தேயிலை மற்றும் காபி இறக்குமதி 10.2 சதவீதம் குறைந்துள்ளது. பால் மற்றும் பால் பொருள்கள் இறக்குமதி ரூ.395 கோடியிலிருந்து ரூ.282.90 கோடியாக குறைந்துள்ளது.

முதல் ஐந்து மாதங்களில் அனைத்து பொருள்கள் இறக்குமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 36.5 சதவீதம் அதிகரித்து ரூ.6,21,089.45 கோடியிலிருந்து ரூ.8,47,987.07 கோடியாக உயர்ந்துள்ளது. மொத்த இறக்குமதியில் அத்தியாவசிய பொருள்களின் பங்கு 4.8 சதவீதமாக உள்ளது.

மியான்மர்

இந்தோனேஷியா, சீனா, மலேசியா, ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, ஜப்பான், தாய்லாந்து,

இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து இந்தியாவின் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி அதிகரித்துள்ள நிலையில், மியான்மர் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து மேற்கொண்ட இறக்குமதி குறைந்துள்ளது.

உள்நாட்டில் உணவு பொருள்கள் விலை மிகவும் அதிகரிக்கும் நிலையில், அத்தியாவசிய பொருள்கள் மீதான இறக்குமதி தீர்வையை மத்திய அரசு குறைக்கும். எனினும், இந்த இறக்குமதியால் உள்நாட்டு நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என்பதை மத்திய அரசு கண்காணித்து வருகிறது. பாதிப்பு ஏற்படும் நிலையில், பொருள் குவிப்பு வரி மற்றும் உள்நாட்டு வர்த்தக பாதுகாப்பு வரி போன்றவற்றை விதித்து வருகிறது.

அமெரிக்க டாலர்

இந்நிலையில், சில மாதங்களாக அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் வெளிமதிப்பில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால், இறக்குமதி செலவினம் அதிகரிக்கும். இது, மத்திய அரசுக்கு ஒரு சவாலாக உள்ளது.

---

## நவம்பர் 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.01 சதவீதமாக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நவம்பர் 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பணவீக்கம் 9.01 சதவீதமாக குறைந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 10.63 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இப்பணவீக்கம் 1.62 சதவீதம் குறைந்துள்ளது.

வெங்காயம்

உணவு பணவீக்கம் 10 சதவீதத்திற்கும் கீழாக சென்றுள்ள நிலையிலும், வெங்காயம், உருளைக்கிழங்கு, கோதுமை நீங்கலாக இதர உணவு பொருள்கள் விலை அதிகரித்துள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் வெங்காயம், உருளைக்கிழங்கு விலை முறையே 32.85 சதவீதம் மற்றும் 7.23 சதவீதம்

குறைந்துள்ளது. மேலும், கோதுமை விலை 3.09 சதவீதம் குறைந்துள்ளது.

அதேசமயம், காய்கறி, பருப்பு வகைகள் விலை முறையே 17.66 சதவீதம் மற்றும் 14.28 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், பால் விலை 10.46 சதவீதம் அதிகரித்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 11.98 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்கள் மற்றும் தானியங்கள் விலை முறையே 4.59 சதவீதம் மற்றும் 2.86 சதவீதம் அதிகரித்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் மற்றும் கனிமங்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் நவம்பர் 5–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 5.33 சதவீதமாக இருந்தது. இது, தற்போது 4.05 சதவீதமாக குறைந்துள்ளது. எண்ணெய் மற்றும் எரிசக்தி பணவீக்கம் முந்தைய வாரத்தைப் போன்று 15.49 சதவீதமாக உள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீதத்திற்கும் அதிக பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள்கள் பணவீக்கம் 10.39 சதவீதத்திலிருந்து 9.08 சதவீதமாக குறைந்துள்ளது.

எதிர்ப்பு

அத்தியாவசிய பொருள்கள் விலை உயர்ந்து வருவதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், உணவு பொருள் பணவீக்கம் குறைந்துள்ளது மத்திய அரசுக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

பிரணாப் முகர்ஜி

அடுத்த இரண்டு வாரங்களிலும் உணவு பணவீக்கம் தொடர்ந்து குறையுமானால், பணவீக்கம் ஓரளவிற்கு கட்டுக்குள் வந்துவிடும் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது, “பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளால், குறுகிய கால அடிப்படையில் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது. இருப்பினும், தொலை நோக்கு அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்த வேண்டுமானால், பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்” என தெரிவித்தார்.

பொது பணவீக்கம்

அக்டோபர் மாதத்தில் பொது பணவீக்கம் 9.73 சதவீதமாக உள்ளது. கடந்த 2010–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து இப்பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்து வருகிறது. எனவே, பாரத ரிசர்வ் வங்கி கடந்த 2010 மார்ச் மாதத்திலிருந்து இதுவரை முக்கிய கடன்களுக்கான வட்டியை 13 முறை உயர்த்தி உள்ளது.